DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 133/2024 |
| Deposition of Witness for | : | P.W.11 |
| Name | : | **மருத்துவர். திரு. ராமசாமி** |
| Father's Name | : | **லிங்கப்பன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | **50/2026** |

**(வழக்கின் எதிரிகள் 1,2 ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 24.02.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை துறையில் இணைப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். நான் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்தபோது கடந்த 09.06.2023 அன்று சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக எங்கள் மருத்துவமனைக்கு உள்நோயாளியாக 25 வயது ஆண் நபர் கிருஷ்ணவர்மா என்பவர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவரை பரிசோதித்து சிகிச்சை அளிக்குமாறு அவசர சிகிச்சை பிரிவிலிருந்து கருத்துரை வழங்கப்பட்டிருந்தது. நான் அவரை பரிசோதித்த போது தலை மற்றும் இரண்டு கைகளிலும் தையல் போடப்பட்ட

காயங்கள் இருந்தது. தலையின் பின்பகுதியில் 7 செ.மீ அளவிலான தையல் போடப்பட்ட காயமும் நெற்றி பகுதியில் 7 செ.மீ அளவிலான தையல் போடப்பட்ட காயம் இருந்தது.

2. வலது முன்கையில் 8 செ.மீ மற்றும் 5 செ.மீ அளவிலான தையல் போடப்பட்ட இருகாயங்கள் இருந்தன. வலது கை கட்டைவிரலில் வீக்கமும் எலும்பு முறிவும் ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. இடது முன்கையில் 7 செ.மீ அளவிலான தையல் போடப்பட்ட காயமும் இடது கை கட்டைவிரல் அடிப்பகுதியில் தையல் போடப்பட்ட காயமும் இருந்தது. மேலும் பரிசோதித்தபோது இடது கை கட்டைவிரலில் தசை நார்கள், ரத்தக்குழாய்கள் மற்றும் நரம்புகள் சேதமடைந்திருப்பது தெரிய வந்தது. அவரது இடது கட்டைவிரல் 90% துண்டிக்கப்பட்டதாக தெரியவந்தது. மேலும் இடது கை கட்டைவிரலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருப்பது தெரியவந்தது. அவருக்கு நுண்கதிர் படம் அவசர சிகிச்சை பிரிவில் MLC 4053 நாள் 09.06.2023 என்ற எண்ணிட்ட படம் எடுக்கப்பட்டிருந்தது. அந்த நுண்கதிர் படம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் நுண்கதிர் பிரிவில் தற்போது உள்ளது. அவருக்கு அறுவை சிகிச்சை அரங்கில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு 15.06.2023 அன்று அவரது சொந்த விருப்பத்தின் பேரில் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டார். என்னை போலிசார் விசாரித்தபோது இடது கை கட்டைவிரல் மற்றும் வலது கட்டைவிரலில் ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்று சான்று வழங்கினேன். மற்ற காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என சான்று வழங்கினேன். அவருக்கு நான் வழங்கிய **காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.9** ஆகும்.

3. தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அ.த.பொ.சா.1 அருவாள்மனையால் தாக்கினால் காயம்பட்ட நபருக்கு மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் அனைத்தும் அருவாள்மனையால் தாக்கும்போது ஏற்பட வாய்ப்புண்டு. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.த.சா.ஆ.9 காயச்சான்றிதழில் காயங்களின் நீள, அகலம் பற்றி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனது உள்நோயாளிகள் பதிவேட்டில் (Case Sheet) சொல்லியுள்ளேன். போலிசார் விசாரணையில் Case Sheet மற்றும் நுண்கதிர் படம் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். காயம்பட்டவருக்கு ஏற்பட்ட மேற்குறிப்பிட்ட காயங்களானது காயம்பட்ட நபர் இருசக்கரவாகனத்தில் கம்பி, கரடு முரடான இடத்தில் வேகமாக சென்று தவறி விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பில்லை. காயம்பட்ட நபர் என்னிடம் மறுநாள் சிகிச்சைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லும் அளவிற்கு சுயநினைவில் இருந்தார் என்றால் சரிதான். அ.த.பொ.சா.1 அருவாள்மனையை காண்பித்து போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.24 14:05:18 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை..**